மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த மாவட்டம் அல்லது நாகப்பட்டினம், ஊட்டி, வால்பாறை போன்ற மலைப் பகுதிகள், இராமநாதபுரம் போன்ற கடைக்கோடிப் பகுதிகளிலே, கிராமப்புறங்களிலே மருத்துவர்கள் பணியாற்றுவதற்கு உரிய சூழலை, மாண்புமிகு அம்மா அவர்கள் எப்படி ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்றால், M.B.B.S. படித்த மருத்துவர்கள் தாங்கள் பணியாற்றுவதற்கு இதுபோன்ற இடங்களைத் தேர்வு செய்தால், அவர்களுடைய மேற்படிப்பில் அவர்களுக்குத் தனியாக, கூடுதலாக இரண்டு மதிப்பெண்களை ஊக்கமாக அளித்து வருகிறார்கள். எனவே, கிராமப்புறங்களிலே அல்லது இதுபோன்ற கடைக்கோடிப் பகுதிகளிலே, மருத்துவச் சேவை தேவைப்படுகின்ற இடங்களிலே அவர்கள் தங்குவதற்கு உரிய வாய்ப்பையும், சிறப்புச் சலுகையையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அளித்து வருகிறது. ஆகவே, அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியிலே கூடுதல் மருத்துவர்களை நியமிப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்)

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

2015 செப்டம்பர் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. நா. இராமகிருஷ்ணன், என்ன? (குறுக்கீடுகள்) சொல்லுங்கள்.*

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசு இலங்கைக் கடற்படைக்கு* 'Varaha' *என்ற பெயர் கொண்ட போர்க் கப்பலை இலவசமாக வழங்கியுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். பிறகு பார்க்கலாம்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன? சொல்லுங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர சிறையில் ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்கும் மேலாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நம்முடைய தமிழ்நாட்டில் உள்ள பிரச்சினையை எழுப்புங்கள். (குறுக்கீடு) நான் காலையிலேயே உங்களிடம் சொன்னேன். (குறுக்கீடு) நான் உங்களைப் பேச அனுமதிப்பது மாதிரி ஏதாவது கேள்வி கேட்டால், நான் உங்களை அனுமதிக்கலாம். நீங்கள் வேண்டுமென்றே வேறு பிரச்சினையை எழுப்பினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அ. சவுந்தரராசன், சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், சொல்லுங்கள். டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

***திரு. அ. சவுந்தரராசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரம் தாலுகா, சேஷசமுத்திரத்தில் ஏற்கெனவே முன்னறிவிப்பு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) திரு. என்.ஆர். ரெங்கராஜன், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. அ. சவுந்தரராசன், அதெல்லாம் ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள்; பிறகு பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்)*

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென்று நான் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதையெல்லாம் மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பேசிக்கொள்ளலாம்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற செப்டம்பர் மாதம், ஐ.நா. சபையில் போர்க் குற்ற விசாரணை குறித்த அறிக்கை தாக்கல் செய்யப்படவுள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். நீங்கள் உட்காருங்கள்; இதையெல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்)*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் மற்றும் புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினர்.)

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடு) திரு. சு. குணசேகரன், என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) எல்லோரும் எழுந்து கேட்கிறார்கள் என்பதற்காக, 'நானும் கேட்கிறேன்' என்று எழுந்து கேட்கிறீர்களா?*

திரு. சு. குணசேகரன்: *நான் அறிவிப்புக் கொடுத்ததைத்தானே கேட்கிறேன்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, சொல்லுங்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈழத்தில் நடைபெற்ற இனப் படுகொலையை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். அவை பற்றிய முன்னறிவிப்புகளெல்லாம் ஆய்விலே இருக்கின்றன. (குறுக்கீடுகள்) பிறகு பேசிக்கொள்ளலாம்; உட்காருங்கள்.*